புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

---

# பழந்தமிழர் வாழ்வில் விளையாட்டும், விழாக்களும்

---

***கட்டுரையாளர்***
***முனைவர் அ.மகாலெட்சுமி,***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*தத்தனூர் (அஞ்சல்), உடையார்பாளையம் (வட்டம்),*
*அரியலூர் (மாவட்டம்) – 621 804.*

---

**ஆய்வுச்சுருக்கம்**

*மானிடர்களின் வாழ்வியல் நெறிகளுக்குத் தொன்மையான அறக்கருத்துக்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் அறிவுக்களஞ்சியமாக நிரம்பக் காணப்படுகிறது. இவைகள் தமிழர்களின் பண்பாடு, பழக்க வழக்கங்களைப் பதிவிடும், நாற்றங்களாய் விளங்குகிறது. அரசாட்சி, சமுதாயம் உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் நீண்டு கொண்டே செல்கிறது. அவ்வகையில் இசைக்கருவிகளை மீட்டி கலைக்கூத்தும் விழாக்களும் நடைபெற்று வந்தன. தெய்வ மேறப்பெற்று ஆடுதல், வேலன் வெறியாட்டு இவைகளும் அணி சேர்க்கின்றன. அவ்வகையில் பழந்தமிழர்கள் கொண்டாடிய விளையாட்டு விழாக்கள் தொடர்புடைய நிகழ்வுகளை ஆராய்கிறது. என்பதுவே ஆய்வுசுருக்கமாக முன்வைக்கப்படுகிறது.*

**முன்னுரை**

*விழாக்கள் என்பவை சமுதாயத்தின் கூட்டுச் செயல்பாட்டையும், வளத்தையும் காட்டும் குறியீடுகள், மக்கள் எல்லாரும் ஒரே சமுதாயத்தில் ஒன்று போல்மகிழ, விழாக்கள் அமைந்திருப்பது இயல்பு. பழந்தமிழர்கள் பல வகை விளையாட்டையும், விழாக்களையும் கொண்டாடியுள்ளனர். இச்செயல்கள்பற்றிஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

1. *மூதூர் : பழைய ஊர்;*
2. *திமை : உச்சிப்பகுதி*
3. *விளக்கம் போல : வெளிச்சம் போல*
4. *மான்நோக்கு : மிரண்டு மிரண்டு பார்ப்பது*
5. *வரிபுனை : அழகுபடுத்துதல்*
6. *சிற்றில் : சிறுமை வீடு*
7. *கழுநீர் : தாமரை*
8. *முந்நீர் : கடல் நீர்(ஆற்றுநீர்.ஊற்றுநீர்.மழைநீர்)*
9. *ஈருள்ளி : வெங்காயம் -*
10. *கார்த்திகை மீன் : ஆறு மீன்*

***விளக்கு விழா***

*விளக்குகள் வைத்துக் கொண்டாடும் முறை பழங்காலத்தில் சிறந்து காணப்பட்டது. அறுமீன் சேரும் முழுநிலா நாளில் மாலை வேலையில் இவ்விழாக் கொண்டாடப்பெறும் இக்காலம் முடிந்து, உழவர்கள் அறுவடையே நோக்கி இருக்கும் காலம் பொதுவாக வேலை எதுவும் இல்லாத காலத்தில் தான் விழாக்களை அமைப்பது மரபாக கொண்டிருந்தனர் தெருக்களில் விளக்குகளை ஏற்றி வைத்து மலர் மாலைகளைத் தொங்க விடுவார்கள் மக்கள் ஒன்று கூடி மகிழ்வார்கள் திருமணமானப் பெண்கள் நன்கு நீராடியபின் பால்பானைகள் வைத்து உலை வைப்பார்கள். விறகுகார் நெல்லைக் கொய்து வலுவான உலக்கையால் தோழிமாரோடு சேர்ந்து இடிப்பார். இவ்விழாக்காலங்களில் அயலூர் சென்றுள்ள ஆண்கள் அவரவர் வீட்டுக்கு விழாக் கொண்டாடத் திரும்புவது வழக்கம். பின்னர்மாலை உச்சியில் விளக்குகள் வைத்து மகிழ்வது வழக்கம் கோங்கு மரங்களின் பூக்கள் பூத்து ஒரு நீண்ட கொடிபோல் இருப்பது போல விளக்குகள் இருந்தன.* ***"அறுமீன் பயந்த அறச்செயல் திங்களில்"1*** *இருந்தன என நற்றிணையில் இபாடலைப் பாடிய பெருங்கடுங்கோ பாடுகிறார். அப்படி நீண்ட கொடிபோல சுடர் விளக்குகள் இருந்தன. (சுப்ரமணியன் சா வே 2016)*

***தைநீராடுதல்:***

*மகளிர் தைத்திங்களில் படிந்து விளையாடும் குளம் என ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. இதே போன்ற கருத்தினை நற்றிணையும் பேசுகிறது. பரிபாடலில் திருவாதிரை நாளும் தை நீராடலும் ஓரளவு விரிவாகப் பேசப்பட்டுள்ளது. தாய்மார்களோடு கன்னிப்பெண்கள் இந்நீராடலை கடைபிடித்தனர்.* ***"நில மலரை காதில் சுடிமற்றொரு பெண்ணை பார்த்தால் அவளது காதில் அசோகத்தளிரை சூடியிருந்தனர் அத்தளிரின் ஒளி பொருந்துவதால் அந்த நிலாமலர் இளவாயில் தழுவியது தழுவியது போலானதகப்பட்டது பவள வளையணி திருந்தவளைப் பார்த்து ஒருத்திகுவளை தண்டினைபச்சை வளையல் ஆககையில்***

***அணிந்திருந்தாள் பின்னர் வைகையில் தண்டைகைப் பற்றி மகளிர் விளையாடினர் இவ்விளையாட்டை பரிபாடல் விளக்குகிறது".2*** *(சுப்ரமணியன் சா வே 2016)*

***புதுப்புனல் விழா***

*பேராறுகளில் நீர்வற்றாமல் ஓடிக்கொண்டிருந்தாலும் நீர் பெருகி, புதுநீர் வருவது இயல்பு புது நீர் வருவதை மக்கள் திரண்டு சென்று பார்த்து மகிழ்வது மரபாகும் அப்பொழுது மலர்களை தூவியும், விளக்குகள் ஒளியேற்றி, வழிபட்டும் வருவார்.* ***"கழா அர்ப் பெருந்துறையில் ஆட்டனத்தி என்பவள் விழாக்காலங்களில் நீராடினால் என பரணர் குறிப்பிட்டுள்ளார். விழாவில் ஆடும் என்னும் சொற்றொடர் அவரால் தரப்படுகிறது. காவிரி வைகை ஆற்றங்கரை பகுதிகளில் இவ்விழா சிறப்புடன் நடைபெற்றதைக் குறிப்பிட்டுள்ளது. இவ்விழா ஏழு நாள்கள் வரை நடைப்பெற்றுள்ளது. என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது."3*** *இவ்விழாவின் போது வழியில் நிறைய பூக்களைச்சிதறக் கடந்தார்கள் முடிவு கொண்டு அடித்து ஆடுவதுண்டு. இதனால் விழாக்காலங்களில் கூத்துக்களும் நடைபெற்றது. (சுப்ரமணியன் சா வே 2016)*

***உள்ளி விழா***

*கொங்கு நாட்டு மக்கள் ஈருள்ளி என வழங்கப்பெறும் உள்ளி விழாவை சிறப்புடன் கொண்டாடினர். கொங்கு நாட்டின் மணியை இடுப்பில் கட்டிக் கொண்டு உள்ளி விழாவின் போது தெருவில் ஆடுவது வழக்கம் இயற்கையைப்பேணிக் காப்பது மழைவளம் வேண்டுதல் முதன்மையானதாக இருக்கும்*

***வீரர் விழா***

*வீரர்கள் கொண்டாடும் பூந்தொடை விழா அகநானூறில் குறிப்பிடுகிறது.* ***"மறவர் மக்கள் முதன் முதலாக அம்பு தொடுத்தார் பொருட்டு இவ்விழா நிகழ்ந்தது."4*** *இவ்விழாவின் பொழுது மணல் கொண்டு வந்து பரப்பி விழா நடக்கும் இடத்தைப்படுத்துவார்கள் குதிரை வீரர்கள் இவ்விழாவில் பங்கு கொள்வார்கள். (சுப்ரமணியன் சா வே 2016)*

***கோடியார் விழா***

*மறவர்களைப் போல வேகூத்தர்களும் தம்மீனத்தார்க்கென்று கொண்டாடிய விழா கோடியர் விழா என அகநானூறு குறிப்பிடுகிறது; பழைய ஊர்களில் இவ்விழா நடைபெறும்.* ***"மூதூர்"5*** *என்னும் குறிப்பு அவ்வாறு நினைக்கதூண்டுகிறது பலாப்பழம், குரங்கு மற்றும் மயில் ஆகியவற்றை முழவு, முழவன் விரலி ஆகியவற்றோடு இணைந்து நாகையர் என்ற பெண்பாற் புலவர் குறிப்பிடுகிறார். (சுப்ரமணியன் சா வே 2016)*

***இந்திர விழா***

*இந்திர விழாவினை சிலப்பதிகாரமும், மணிமேகலையும் குறிப்பிடுகிறது. இவ்விழாக் காலத்தில் மக்கள் ஒன்றுக்கூடிக் கொண்டாடுவார் என்பதை ஐங்குறுநூறு நூற்றிலிருந்து அறிய முடிகிறது. சித்திரை மாதத்தில் சித்திரை ஓரையில் முழுநிலாக் காலத்தில் இவ்விழா நடைபெற்றது இவ்விழா தொடங்கும் முன் அரசனுடைய முரசத்தையானை மீது ஏற்றி வள்ளுவ முதுமகன் அவ்விழா நாளை பற்றி நெருக்க*

*பறையறைந்து சொல்வான் என மணிமேகலை வழியாகவும், சிலம்பின் வழியாகவும் அறிகிறோம்.* **“அப்போது விழாக்குரிய முன்னேற்பாடுகளை செய்யுமாறும் தெய்வங்களுக்கு சிறப்பு செய்யுமாறும் பட்டி மண்டபம் ஏறி ஆராய்ச்சி நடத்துமாறும் பசியின்று வளமாக வருமாறும் கூறி முரசறைவது வழக்கம்.”***6 (சுப்ரமணியன் சா வே 2016) நகர வீதிகள் பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு ஆகியவற்றினால் அணியச் செய்யப்பட்டன. ஐம்பெருங்குழுவும் எண் பேராயமும், அரசகுமாரரும் யானைகள் மற்றும் தேர்களில் வந்து அரசனை வாழ்த்துவர், உடனே காவேரியின் புண்ணிய நீரைக்குடங்களில் கொண்டு வந்து இந்திரனை நீராட்டுவார் .சிவன் முதலிய கோயில்களில் வழிபாடுகள் செய்யப்பட்டன அறவேர் பற்றிய முதலிய இடங்களில் அறநெறி சொற்மொழிகள் நிகழ்ந்தன இசை ஒரு பக்கம் நிகழ்ந்தது. இவ்வாறு மக்கள் மகிழ்ச்சியுடன் இந்திர விழா கொண்டாடியதை சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.*

**காமவேள் விழா**

*காமவேள் விழா ஒன்று கொண்டாடப்பட்டதாக கலித்தொகை குறிப்பிடுகிறது. காமவேள் கோட்டம் எனக்கண் கோயிலமைப்பு இருந்ததாக சிலப்பதிகாரமும், பரிபாடலும் தெரியப்படுத்துகின்றன. இவ்விழா இளவேனில் காலத்தில் கொண்டாடப்பட்டது.* **‘’தம் காதலருடன் காதலர்கள் மகிழ்ந்து விளையாடிய இவ்விழாவை கொண்டாடுவது வழக்கம். பிரிந்தவர்கள் அந்த நேரத்தில் கட்டாயம் வந்து சேர்ந்து விடுவார்கள் என்பதுவும் புலனாகிறது.”***7 ஆடவர் பெண்டிர்கூடி மகிழ்ந்த விழாவாக காமவேள் விழா காணப்பட்டது. (சுப்ரமணியன் சா வே 2016)*

**மகளிர் விளையாட்டு**

*தம் உடலமைப்பிற்கும் உள்ள இயல்புக்கும் ஏற்ற விளையாட்டு களைத்தமிழ் பெண்கள் விளையாடினர். மணலில் சிறு வீடுகட்டுதல், சுழ்ற்சிக்காய், அம்மானைக்காய் முதலியவற்றைகையாற் பிடித்து ஆடுதல் பறவை உயர்ந்து பறக்குமாறு உந்திபறத்தல், பந்தாடுதல், ஊஞ்சலில் ஏறி ஆடுதல், பூக்கொய்தல் மற்றும் புனல் விளையாடல் போன்ற விளையாட்டுகளை பழந்தமிழ் பெண்கள் விளையாடினர். விளையாடும் மகளிர் கூட்டத்தை ஆயம் என்னும் சொல்லி குறித்தனர். இரு பெண்கள் இணைந்து நீர் விளையாட்டு நிகழ்த்தியதை குறுந்தொகை அழகாகக் குறிப்பிடுகிறது. வெப்பத்தின் துணைக் கொண்டு நீராடுவது பழம் தமிழர் மரபாக காணப்பட்டது.* **அவல் இடித்த உலக்கைகளை கீழே போட்டு விட்டு வண்டல் விளையாடியதை புறநானூறு குறிப்பிடுகிறது கரிய சேற்றைக்கிளறி ஆமையின் முட்டையையும், ஆம்பலின் கிழங்கையும் மகளிர் எடுப்பதுண்டு சிறுமியர்பச்சை க்கோரையினால் செய்த பாவையை தம்மகளாகப் பாவித்து விளையாடுவதும் உண்டு.”***8.* *பூக்களால் பாவைக்கு பலவகை ஒப்பனை செய்வதுண்டு நெய்தல் நிலச்சிறுமியர் சுறாமீன் கொம்பல் செய்த பலகையினைத் தன் தாழையின் விழுதல் திரித்தகயிற்றால் கட்டி ஊஞ்சலமைத்து அதில் அமர்ந்தபடி மகிழ்ந்தனர்.* **“மரத்தினால் செய்யப்பட்ட ஒரு வகை பாவைக்கு குலமகள் என்னும் பெயர் வழங்கியது.***9 முல்லை நிலச்சிறுமியபகாக் கொடிகள்*

*படர்ந்துள்ள தோட்டப் பகுதிகளில் விளையாடினர் அம்மகளிர் பிடவம் தடவம் தோன்றி கொன்றை முதலிய பூக்களைக் கொண்டு தாழையும், மாலையும் செய்தனர் இத்தகு பழந்தமிழ் மகளிர் விளையாட்டு காணப்பட்டது. (மாணிக்கவாசகன்.ஞா 2014, புலியூர் கேசிகன் 2015)*

***வீரர் விளையாட்டு***

*வீரர்களும் உடற் பயிற்சி செய்ததோடு பொழுது போக்குக்காக விளையாடினர். மதுரை, வைகை ஆற்றோரம் விளையாட்டுகளம் இருந்தது. அங்கு அவர்கள் யானைகளோடு விளையாடினர். ஞாயிறு மறைந்த பின் சில வீரர்கள் போய் **"பயிற்சி பெற்ற யானைகளை தங்களைத் தொடர்ந்து வந்து பிடிக்கும்படி ஏவினார் அவ்வாறு அவை தொடரும் போது அவரின் போக்கை தடுப்பதற்காக தம்மடியிலிருந்த தரையில் இங்கு மங்குமாக போட்டு விட்டு அவர்கள் ஓடினர். யானைகள் அவற்றைகண்டு அஞ்சி அடி எடுத்துவைக்காமல் நின்று விட்டன இதை கண்ட வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.10** இத்தகைய விளையாட்டுகள் பழந்தமிழ் வாழ்வியலோடு ஒன்றிணைந்து காணப்பட்டது. (சுப்ரமணியன் சா வே 2016)*

**தொகுப்புரை**

*செழுமையான மொழியாக தமிழ் உயர்ந்து உச்சாணிக்கொம்பில் நிலைத்து நிற்பதற்கு காரணம் அதன் தொன்மை தன்மையே ஆகும் முச்சங்க வரலாறு தமிழிலக்கியத்தின் தொன்மையை எடுத்துரைக்கிறது. கடல் கொண்ட தென் மதுரையில் இருந்த முதல் சங்கம் 4400 ஆண்டுகள் செயல்பட்டது கபாடபுரத்தில் இருந்த இரண்டாம் சங்கம் 3700 ஆண்டுகள் இருந்ததாகவும், மதுரையிலிருந்து மூன்றாம் சங்கம் 1850 ஆண்டுகள் செயல் பட்டதாகவும் இறையனாரின் களவியல் உரைகருத்துரைக்கின்றது.*

*வாழ்வியல் கூறுகள் மனிதர்களது பண்பாட்டு நிலை, நீர்வளம், நிலவளம், உழவுத் தொழில் போதாத முறை வள்ளல்களின் கொடைச்சிறப்பு மற்றும் கலைகள் போன்றவை உள்ளடக்கம் அவ்வகையில் சங்ககால தமிழர்கள் ஒளியின் உண்மையை உணர்ந்த விளக்குயாவும் புதுநீர் வருகையை வரவேற்று புனலாய் விழாவும் போரின் வெற்றிகளைப் படையல் இடவீரர்களின் விழாவையும் கொண்டாடினர். மகளிரினம் வளம் பெறபல் நிலை மகளிர் விளையாட்டை விளையாடினர். போன்ற வாழ்வியலின் வழி முறை சார்ந்த கருத்துக்களை இக்கட்டுரை எடுத்து இயங்கியது என்பது தொகுப்புரை அமைகிறது.*

**முடிவுரை**

பழந்தமிழரின் பண்பாட்டையும், வரலாற்றையும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் பயன்படும் சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியல் கூறுகளை அறிந்து கொள்ள உதவும் வேர்களாகவும் உள்ளது. தமிழருடைய அகத்தையும், புறத்தையும் காட்டுவதாகவும் காணப்படுகிறது. தொல்லியல், மானுடவியல் அகழ் வாழ்வியல் மூலம் பழந்தமிழரின் அடையாளங்களை காணமுடியும். அவ்வகையில் பழம் தமிழரின் வாழ்வியலில் இணைந்து காணப்பட்ட விளையாட்டையும், விழாக்களையும் அதன் கூறுகளை ஆராய்ந்துள்ளது என்பது இக்கட்டுரையின் முடிவுரையாகும்.

சான்றெண்கள்


| | | | பா – | வரி | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | சுப்ரமணியன் சா வே - | நற்றிணை | 123 | 8 | 154 |
| 2. | சுப்ரமணியன் சா வே - | பரிபாடல் | 11 | 74 | 92 |
| 3. | சுப்ரமணியன் சா வே - | மதுரைக்காஞ்சி | 427 | 428 | 596 |
| 4. | சுப்ரமணியன் சா வே - | அகநானூறு | 185 | 10-13 | 255 |
| 5. | மேலது - | அகநானூறு | 141 | 8-10 | 245 |
| 6. | மேலது - | அகநானூறு | 368 | 18 | 297 |
| 7. | சுப்ரமணியன் சா வே - கலித்தொகை | | 27 | 24 30:10:14 | 325.-327 |
| 8. | மாணிக்கவாசகன்.ஞா - | புறநானூறு | 114 | 1. 2 | 161 |
| 9. | புலியூர் கேசிகன் - | குறுந்தொகை | 392 | 2 | 483 |
| 10. | சுப்ரமணியன் சா வே - | மதுரைக்காஞ்சி | 594 | 599 | 596 |

**பார்வை நூல்**


*1. சுப்ரமணியன் சா வே - உரையாசிரியார்*
*மணிவாசகர் பதிப்பகம்*
*பாரிமுனை-சென்னை-18*

*2. தமிழ் நாட்டு வரலாற்று குழு - சங்ககாலம் வாழ்வியல் வெளியீடு*
*தமிழ்நாடு பாடநூல் மற்றும்*
*கல்வியியல் பணிகள் கழகம்*
*மதிப்பு 2018.*

*3. சுப்ரமணியன் சா வே - ஐம்பெருங் காப்பியம்*
*மூலமும் தெளிவுரையும்*
*மணிவாசகர் பதிப்பகம்*
*பாரிமுனை-சென்னை-18*

*4. அவ்வைது ரைச்சாமிபிள்ளை - சிலப்பதிகரரம் தமிழ் நிலையம்*
*தி.நகர் சென்னை-18*
*நூற்பதிப்பு - 1985. 5.மாணிக்கவாசகன்.ஞா -*
*புறநானூறு மூலமும் உரையும்*
*உமா பதிப்பகம்*
*மண்ணடி சென்னை.*

*6.புலியூர் கேசிகன் - குறுந்தொகை(தெளிவுரை)*
*பாரி நிலையம்*
*பிராட்வே சென்னை.*